செய்தி வெளியீடு எண்: 757 நாள்: 14.09.2008

<u>பொது (பல்வகை) த்துறை</u>

<u>செய்தி வெளியீடு</u>

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, 15.09.2008 (திங்கட்கிழமை) மட்டும் செலாவணி முறிச்சட்டம் 1881–ன்கீழ் பொது விடுமுறை நாளாக அரசாணை (நிலை) எண்.1047, பொது (பல்வகை)த்துறை, நாள் 14.09.2008–ல் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அரசு அலுவலகங்கள், அரசினால் அமைக்கப்பட்ட வாரியங்கள் மற்றும் கழகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அதிகார அமைப்புகள், கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகள், தொழில்துறை நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்கள் ஆகியவையும் இந்த விடுமுறையை அனுசரிக்கும். பிற நிறுவனங்களும் இவ்விழாவின் சிறப்பினை கருத்தில் கொண்டு தங்களது அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பொது விடுமுறை நாளாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே.எஸ். ஸ்ரீபதி
தலைமைச் செயலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9